செ. கு. எண்: 080 நாள் : 02.09.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.9.2015

8.5.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், மேலமருதப்பபுரம் மஜ்ரா, அண்ணாமலைபுதூரைச் சேர்ந்த திரு. வேலுச்சாமி என்பவரின் மனைவி சிந்தாமணி சாலையில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

17.5.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு வெங்கடேசன் என்பவரின் மகன் கலியபெருமாள்;

19.5.2015 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், புலியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வைத்தியலிங்கம் என்பவரின் மகன் நாராயணசாமி;

பண்ருட்டி வட்டம், அழகுபெருமாள் குப்பம் மஜ்ரா, ரெட்டிகுப்பம் பகுதியைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் பழனி;

28.5.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், சித்தாத்துரை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் ரங்கசாமி;

1.6.2015 அன்று சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வைத்தியகவுண்டன்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதுரை என்பவரின் மகன் செல்வன் ஆகாஷ்;

– ஆகியோர் வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**